**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 66 /2017**

2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09-ம் நாள் செவ்வாய்கிழமை என்பவரது சாட்சியாகிய இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி செல்வி. வெ. பார்கவி B.A.,B.L.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.11.2021 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | ஜெயராமன் (PW-1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| சாதி: | | வயது : | |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை: 09.11.2021</u>**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

01.07.2013 தேதியிட்ட தாவாச்சொத்தைப் பொறுத்து பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.12.2014 தேதியிட்ட எனக்கு சீர்காழி மண்டல துணை வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவின் அசலை தாக்கல் செய்கிறேன்,

இந்த ஆவணம் பிரதிவாதி தரப்பில் கோபுர முத்திரை இல்லை என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணையுடன் இந்த ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.01.2015 தேதியிட்ட எனக்கு சீர்காழி துணை வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட பட்டாவின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.01.2015, 19.10.2015 மற்றும் 14.06.2016 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட கிஸ்தி ரசீதுகளின் (எண்ணிக்கை-3) அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.05.2012 தேதியிட்ட எனது தாயாருக்கு நில சீர்திருத்த இணை ஆணையரால் வழங்கப்பட்ட தீர்வு சான்றிதழின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.03.2012, 02.03.2012 மற்றும் 04.07.2014 ஆகிய தேதிகளில் தாவாச்சொத்தைப் பொறுத்து சீர்காழி சார் பதிவாளரால் வழங்கப்பட்ட வில்லங்க சான்றிதழிகளின் (எண்ணிக்கை-3) அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.08.2011 தேதியிட்ட எனது தகப்பனாருக்கு நில சீர்திருத்த இணை ஆணையர் அளித்த ஒப்படைப்பு ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.03.2012 தேதியிட்ட நான் நில சீர்திருத்த இணை ஆணையரின் அலுவலகத்தில் தவணை பாக்கிய செலுத்தியதற்கான ரசீதுகளின் அசலை (எண்ணிக்கை-3) தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.03.2017 தேதியிட்ட எனது பெயரில் உள்ள கணினி பட்டாவின் கணினி நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**